

மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் மதுராந்தகம் சட்டமன்ற வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து, அச்சிறுப்பாக்கம் பகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழகக் கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் க.சுந்தர், க.செல்வம், எம்.பி., எம்.எஸ்.தரணிவேந்தன். எம்.பி., வசந்தம் கார்த்திகேயன். எம்.எல்.ஏ., தா.உதயசூரியன், சி.என்.அண்ணாதுரை. எம்.பி., கே.கண்ணன், டி.வி. கோகுலகண்ணன், கே.பிரகாஷ், ஆர்.சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன் உட்படபலர் உள்ளனர்.

## பொங்கும் விவசாயிகள்... புழுங்கும் முகவர்கள்!

# ஆவினுக்கு 'பால் ஊற்றும்' 'டம்மி' முதல்வர்!

## கொந்தளிக்கும் மக்கள்!

**ஆ**வின் பால் தட்டுப்பாடு அதிகரித்துவரும் சூழலில், "உயர்ந்துவிட்ட விலைவாசி உயர்வுகளுக்கு ஏற்ற வகையில், பால் கொள்முதல் விலையையும், பால் முகவர்களின் கமிஷன் தொகையையும் உயர்த்தாவிட்டால், ஆவின் நிர்வாகமே விரைவில் அழிந்து போகும்" எனக் கொதிப்புடன் சாபமிடுகிறார்கள் பால் உற்பத்தியாளர்களும் முகவர்களும்!

இது குறித்து 'தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச் சங்க'த்தின் பொதுச்செயலாளர் எம்.ஜி.ராஜேந்திரனிடம் கேட்டபோது,"உணவுப் பொருள்களின் விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால், குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் அத்தியாவசியத் தேவையான பாலுக்கு மட்டும் உரிய உற்பத்தி விலையைக் கொடுக்க அரசு மறுத்துவருகிறது.

ஒரு லிட்டர் பசும்பால் உற்பத்திக்கான தீவனம் உள்ளிட்ட செலவு 60 ரூபாயையும் தாண்டுகிறது. ஆனால், இப்போதுதான் ஒரு லிட்டர் பால் கொள்முதலுக்கான விலையை, தமிழக அரசு 44 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. தற்போது உயர்த்தப்பட்டுள்ள இந்த 6 ரூபாயில், ஒரு ரூபாயை மட்டும் அரசு நேரடியாக வழங்குவதாகவும், மீதமுள்ள 5 ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கவிருப்பதாகவும் திட்டமிட்டிருக்கின்றனர்.

ஊக்கத்தொகை என்பது அரசு நிதி ஒதுக்கிய பிறகே, ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்கும் என்பதால், உயர்த்தப்பட்ட இந்த 5 ரூபாயும் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படும்.

அடுத்ததாக 4.3% கொழுப்புச்சத்து, 8.2% இதர சத்துகளைக்கொண்ட பாலுக்கு மட்டும்தான் இந்த 44 ரூபாய் கிடைக்கும். ஆனால், மொத்த பால் உற்பத்தியில் வெறுமனே 10% மட்டுமே இந்தத் தரத்தில் கிடைக்கும். மீதமுள்ள 90% இந்தத் தரத்துக்குக் கொஞ்சம் குறைவானதாகத்தான் இருக்கும். இது போன்ற தரம் குறைந்த பாலுக்கு, ஒன்றிரண்டு ரூபாயைக் குறைத்துத்தான் கொடுப்பார்கள். இது மட்டுமல்லாமல், கூட்டுறவு சங்க செலவுகளுக்காக, ஒவ்வொரு லிட்டர் பாலுக்கும் ஒரு ரூபாய் 25 காசு பிடித்தமும் செய்துகொள்வார்கள்.

இப்படித் தொடர்ச்சியாக நஷ்டத்தையே சந்தித்துவரும் பால் உற்பத்தி விவசாயிகளில் பெரும்பாலானோர் மாடு வளர்ப்புத் தொழிலையே விட்டுவிட்டனர். இதனால் 32 லட்சம் லிட்டர் என்ற அளவில் இருந்த ஆவின் கொள்முதல் இன்று 27 லட்சம் லிட்டராக சுருங்கிப் போய்விட்டது. இந்த நிலையில், தற்போது இருக்கின்ற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் அரசு, ஒரு லிட்டருக்கான கொள்முதல் விலையை ரூ.60ஆக உயர்த்தித் தர வேண்டும்" என்றார் கோரிக்கையாக.

தொடர்ந்து தனியார் பால் நிறுவனங்களின் செயல்பாடு பற்றிப் பேசியவர், "தனியார் பால் நிறுவனங்கள் 45 ரூபாய்க்கும் அதிகமாக விலை கொடுத்து பால் கொள்முதல் செய்கின்றனர். பாலின் தரம் கொஞ்சம் குறைவாக இருந்தாலும்கூட விலையில் எந்தவித மாறுதலும் செய்வதில்லை. பாலுக்கான பணத்தையும் ஆவின் நிர்வாகம்போல் இழுத்தடிக்காமல் உடனுக்குடன் பட்டுவாடா செய்து விடுகின்றனர். இதனால் பால் உற்பத்தியாளர்கள் தனியாருக்குப் பால் வழங்க அதிக ஆர்வம் காட்டுகின்றனர்" என்றார்.

இதற்கிடையே 'தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்க'த்தின் நிறுவனத் தலைவர் பொன்னுசாமி நம்மிடம் பேசும்போது, "பால் முகவர்களுக்கான கமிஷன் தொகையை உயர்த்திக் கொடுக்குமாறு, கடந்த நாங்கள் போராடிவருகிறோம். அது குறித்து காது கொடுக்காத தமிழக அரசு, தற்போது தான் ஆவினுக்கான பால் கொள்முதல் விலையை உயர்த்தியிருக்கிறது.

> **டாஸ்மாக்கில் வெளி மாநில மதுபானங்கள் கொண்டு வந்து விற்க முயலும் அரசு, பச்சிளம் குழந்தை அருந்தும் பாலுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டாமா?**

அப்போதும்கூட உயர்த்தப்பட்ட கொள்முதல் விற்பனைக்கு ஏற்ற வகையில், விற்பனை விலையை உயர்த்தவில்லை. இதனால், ஆவினுக்கான நிதியிழப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. மேலும் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டும் ஆவினுக்கான பால் வரத்தும் அதிகரிக்கவில்லை.

எனவே, கர்நாடகா மாநில கூட்டுறவு பால் நிறுவனமான நந்தினியிடமிருந்து கூடுதல் விலை கொடுத்து பால் கொள்முதல் செய்வதோடு,வடமாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் வெண்ணெய், பால் பவுடரைக்கொண்டும் தட்டுப்பாட்டைச் சமாளித்துவருகின்றனர். இது மட்டுமல்லாமல், ஆவின் நஷ்டத்தைக் குறைக்கும் முயற்சியாக, பால் விற்பனையைக் குறைக்க வலியுறுத்தி ஆவின் நிர்வாகத்திலிருந்தே வாய்மொழி உத்தரவும் பிறப்பித்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக ஆவின் பாலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, த.வெ.க அரசுக்கு அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. கூடவே, பால் முகவர்களும் வாழ்வாதாரத்தை இழந்து, விழிபிதுங்கி நிற்கின்றனர்.

எதிர்க்கட்சிகளுக்குப் பயந்துகொண்டு ஆவின் பால் விலையை உயர்த்தாமல் இருக்கிறது த.வெ.க. அரசு. இதனால் பால் உற்பத்தியாளர்கள், முகவர்கள் நஷ்டமடைந்து தொழிலே அழிந்துபோவதோடு, த.வெ.க அரசுக்கும் கெட்ட பெயர்தான் கிடைக்கும்" என்றார் அழுத்தமாக.

டாஸ்மாக்கில் வெளி மாநில சரக்கைக் கொண்டு வந்து விற்க முயலும் அரசு, பச்சிளம் குழந்தை அருந்தும் பாலுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டாமா?

நன்றி
**'ஜூனியர் விகடன்'**
23.09.2026

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேடப்பட்டி இரா. முத்தையா
### செப்டம்பர் 21 (2022)



**திராவிடக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து தீவிர கழகப் பணியாற்றினார்.**

**மதுரையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அத்துடன் – தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும், ஒன்றிய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## இடைத்தேர்தல்:
# தி.மு.க. கூட்டணிக்கு அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகம் ஆதரவு!

*சென்னை, செப்.21-*

*நடைபெறவிருக்கும் மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளும் என்று அருந்ததியயர் மக்கள் முன்னேற்றக் கழகம் தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து பி.கே. ரங்கநாதன் தெரிவித்திருப்பதாவது:-*

*நடைபெறவிருக்கும் 2026 மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, ஆவடி பி.கே.ரங்கநாதன் அவர்களை நிறுவனர்/ தலைவராகக் கொண்ட அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாகவும் தெரிவித்துள்ளது.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# பெரியார் 148
# பெரியார் சான்றாண்மையின் உச்சம்!



**1998** ஆம் ஆண்டில் கல்கி நினைவுகள் என்ற நூலைக் கல்கியின் துணை ஆசிரியராகவும், பின்னாளில் "சத்ய கங்கை" ஆசிரியராகவும் பணியாற்றிய எழுத்தாளர் பகீரதன் எழுதி வெளியிட்டார்.

இந்நூலில் திருவாளர் கல்கியுடன் தொடர்பு கொண்ட ஆளுமைகள் அனைவர் பற்றிப் பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

21 ஆவது பகுதியில் பெரியாரும் கல்கியும் என்ற தலைப்பில் நூலாசிரியர் கல்கி இல்லத் திருமண நிகழ்ச்சியில் பெரியார் கலந்து கொண்டது பற்றி ஒரு பகுதியே இடம் பெற்றுள்ளது.

விடுதலை போராட்டக் காலத்தில் காங்கிரஸ் நிருவாகியாகப் பணியாற்றியதாகத் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் நூலாசிரியர், தலைவர் காமராசர் பற்றிய எவ்விதத் தகவல்களையும் இந்த நூலில் இடம் அளிக்கவில்லை.

நூலாசிரியர் இராஜாஜி சார்பு நிலையில் இருந்த காங்கிரசு விரும்பி ஆவார். நூலின் ஒரு பகுதியில் ( பக்கம் 214) "ராஜாஜிக்கு லஷ்மணனாக இருந்தார் கல்கி அவர்கள்.

கல்கி அவர்களுக்கு லஷ்மணனாக இருந்தேன் நான்." நீதிக் கட்சித் தேர்தலில் தோல்வி அடைந்ததும், "கல்கி அவர்களின் இளரத்தப் பேனா குதித்து எழுந்தது."

"பொப்பிலி கட்சி, என்று அதை வாரந்தோறும் 'இறக்கி ' பரிகசித்து வந்த கல்கியின் பேனா, இப்போது " வீழ்ந்தான் அரக்கன்" என்று தலைப்பிட்டு, வீழ்ந்த (பொப்பிலி) அரக்கன் மீது (சிவ ) தாண்டவமே ஆடிவிட்டது."( பக்கம் 241).

இந்த நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் கே.ஏ.கிருட்டிணசாமிதான், "இந்த நூலை நீங்கள் வாங்கிப் படிக்க வேண்டும்" என்று என்னிடம் கூறினார்.

அக்காலக்கட்டத்தில் நாள்தோறும் அறிவாலயத்தில் கலைஞரோடு நடைபயிற்சி முடித்துவிட்டு இராதா கிருஷ்ணன்சாலையில்உள்ள சரவணா உணவகத்திற்குத் தேநீர் குடிப்பதற்கு வருவேன். திரு.கே.ஏ.கேவும் வருவார்.

பகீரதன் பணிபுரிந்த இடம் அவாள் கருத்துகளைத் தூக்கிப் பிடிக்கும் இடம் என்பதால்தான் எச்சரிக்கையுடன் படிக்க வேண்டும் என்று கே.ஏ.கே கோடிட்டுக் காட்டினார்.

கணியூர் குடும்பம் அல்லவா?

நூலில் பல பகுதிகளில் பெரியார் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. "கல்கி அவர்கள் தம்முடைய வாழ்க்கையை ஒரு காங்கிரஸ் தொண்டனாகத் திருச்சியில் தொடங்கினார்."

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் மாதச் சம்பளம் பிரச்சாரகராக அவர் இருந்தார்." "அந்த நாளில் தமிழ் நாட்டில் காங்கிரசை வளர்த்த பெரியோர்களில் முக்கியமானவராக திரு. திரு.ஈ.வெ.ரா விளங்கினார்."

"கல்கி பணிக்கு வந்தபோது திரு.ஈ.வே.ரா தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தார்." "அப்போதே பெரியாரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக கல்கி அவர்கள் பணியாற்றினார்." "திரு.நாயக்கர் கல்கி அவர்களைத் தம்முடைய நண்பராகவே நடத்தி வந்தார்."

"அந்த நட்பும் மரியாதையும் பெரியார் அவர்கள் காங்கிரஸிலிருந்து பிரிந்து சுயமரியாதை இயக்கம் கண்ட போதும் மாறாமலே இருந்தது." "அப்புறமும் தொடர்ந்து இருந்து வந்தது. பெரியார் அவர்கள் ராஜாஜியின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமாக இருந்தார்."

"திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமம் தொடங்கியதும், ஈ.வே.ரா அதைத் தொடங்கி வைத்ததுடன், ராஜாஜிக்குத் துணையாகயிருந்து பணியாற்றினார்."

"கல்கி அவர்கள் தன்னுடைய அருமை மகள் ஆனந்திக்குத் திருமணம் நடத்த ஏற்பாடு செய்தார்.....

பெரியார் அவர்களையும் திருமணத்துக்கு அழைக்க விரும்பினார். பெரியாரை அவரது சிந்தாதிரிப்பேட்டை இல்லத்தில் கல்கி தங்கள் வீட்டிற்கு நேரில் வந்து திருமண அழைப்பிதழ் கொடுக்க விரும்புவதாகக் கூறினேன்.

"என்னை நன்கு அறிந்திருந்த பெரியார் நாளைக்கு இரவு எட்டு மணிக்கு வரச் சொன்னார்."

" பெரியாரிடம் விடை பெற்றுக் கொண்டேன். அவ்வளவு பெரிய தலைவர் ஊஞ்சலை விட்டு இறங்கி வாசல் வரை வந்து வழி அனுப்பினார்."

"பெரியாரின் அந்தப் பண்பையும், நாகரிகத்தையும் பார்த்து வாழ்க்கையில் ஒருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அன்று தான் புரிந்து கொண்டேன்"

"ஒரு பல்கலைக்கழகம் சொல்லிக் கொடுக்க முடியாத பண்பையும் நாகரிகத்தையும் பெரியார் ஒரு சில விநாடிகளில் எனக்குப் போதித்துவிட்டார்."

மறு நாள் கல்கி அவர்கள் நேரில் சென்று பெரியாருக்குத் திருமண அழைப்பிதழை வழங்கினார். நானும் உடன் சென்றேன்.

திருமணவிழா அழைப்பிதழைப் பெரியாரிடம் அளித்துவிட்டுப் பகல் 12 மணி அளவில் வரும்படி கல்கி வேண்டுகோள் வைத்தார்.

காலையில் ராஜாஜி உட்படப் பல தமிழ்நாட்டின் ஆளுமைகள் வைதீகமுறைப்படி நடைபெறும் திருமணத்தில் கலந்து கொள்கின்றனர்.

கல்கி விருப்பத்திற்கு ஏற்ப பெரியார் 12 மணிக்கு மணவிழா இடத்திற்கு செல்கிறார். கலைவாணர் என்.எஸ்.கே. டி.ஏ.மதுரம் இணைந்து பெரியாரை வரவேற்கிறார்கள். "தன் மகள் ஆனந்தியையும்,திரு.சதாசிவம் அவர்களின் சுவீகாரப் புத்திரனாக இருந்த அவருடைய மருமான், மாப்பிள்ளை ராமசந்திரனையும் கல்கி அவர்கள் அழைத்து வந்தார் ."

"பெரியாருக்கு நமஸ்காரம் செய்யச் சொன்னார்."

பெரியார் சட்டென்று" இருங்கள் , இருங்கள்"என்று சொல்லி கல்கி அவர்களைப் பார்த்தார்." உள்ளே இருந்து வீபூதி குங்குமம் கொண்டு வரச்சொன்னார் கல்கி.

'மணமகள் ஆனந்தியும், ராமசந்திரனும் பெரியார் திருவடியில் நமஸ்காரம் செய்தார்கள்." "தம்மை வணங்கிய மணமக்களை இருவரையும் வாழ்த்தி அவர்கள் நெற்றியில் திருநீற்றை இட்டார்." "அந்த கண்கொள்ளாக் காட்சியைப் படம் எடுத்தார்கள். "பளிச் பளிச் "என்று கேமராக்கள் மின்னின."

"இந்தக் காட்சியை கல்கி ஏடு வெளியிட்டது.

அச்சிற்குப் போவதற்கு முன்பு ஆசிரியர் கல்கியின் பார்வைக்குச் சென்றது."

"இதை யார் எழுதிச் சேர்த்தது? என்று கேட்டார். நான் பதில் சொல்லாமல் நின்று கொண்டிருந்தேன்."

"பகீரதன்! பெரியார் என் மீது உள்ள அன்பின் காரணமாகத்தான் என் மகள் திருமணத்திற்கு வந்தார்."

"அவர் நாகரிகமும், மனித நேயமும் உள்ளவர். அவர் நம் நாட்டு வைதீக முறையில் நடைபெறும் திருமணத்தை வன்மையாக கண்டித்துப் பேசி வருகிறார்."

"அவருடைய லட்சியத்தையும், கொள்கையும் மீறித் தமிழ்நாட்டின் பராம்பரியமான சம்பிரதாயப்படி குழந்தைகளுக்குத் திருநீறு இட்டு வாழ்த்தினார்."

"பெரியாருடைய அன்பு தான் அந்த காரியத்தைத் தூய்மையுள்ளத்துடன் செய்ய வைத்திருக்கிறது. நாம் கேட்காமலே அவர் நமது வைதீக முறைப்படி வாழ்த்தியது நட்பின் சிகரம்."

"இந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையில் எழுதி பெரியார் அவர்களுடைய குறிக்கோள்களுக்கும் லட்சியத்துக்கும் மாசு ஏற்படுத்தலாமா?"

"அவருக்குத் தெரிந்த லௌகிமமும், இங்கிதமும் உங்களுக்குத் தெரியவில்லையே? என்று சொல்லி அந்த பாராவை அடித்து எடுத்து விட்டார்."

"பெரியாருடைய கொள்கைக்கும் லட்சியத்துக்கும் மாசு ஏற்படாமல் கல்கி அவர்கள் நடந்து கொண்ட அந்த உன்னதப் பண்பாட்டை இப்போது நினைத்து பார்க்கிறேன்."..

"பெரியாரைப் பண்பாடும், நாகரிகமும் நிறைந்த குருவாக ஏற்றுக் கொண்ட கல்கி அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் அவரை அந்த குரு பீடத்திலேயே மனதுக்குள் வைத்து வழிபட்டு வந்தார்."

"இது கல்கி அவர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்."

"அதை அன்று என்னிடம் சொல்லி நான் எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று என்னையும் நெறிப்படுத்தினார்." (பக்கம் 274 283) புகழ் பெற்ற எழுத்தாளர் தீவிர வைதீகப் பாதுகாவலர் கல்கி பெரியாரரை எப்படிப் போற்றி மதித்துள்ளார் என்று இன்றைய கடப்பாறைகளுக்குத் தெரியாதல்லவா! புத்தர் தனது கொள்கை பயணத்தில் தன்னை எதிர்த்து வர்களைக்கூட அன்பினால் அணைத்தார்.

பெரியார் தனது நீண்டத் தொண்டறப் பயணத்தில் தனது கொள்கையை எதிர்த்தவர்களிடம் எப்படிச் சான்றாண்மையோடு நடந்து கொண்டார் என்பதற்கு பகீரதன் குறிப்பிடும் கல்கி வீட்டுத் திருமண நிகழ்வு ஒரு தக்கச் சான்றாகும்.

உலகச் சிந்தனையாளர்களின் வரிசையில் சான்றாண்மையின் உச்சம் தான் நமது தந்தை பெரியார்.



பேராசிரியர்.
**மு.நாகநாதன்**